1981 ஏப்ரல் 15]

பார்த்து அதற்காக அவர்களுக்கு இருக்கிற ஒரே வருமானம் வரிதான். அந்த வரியின் மூலமாக அதை உயர்த்திக் கொடுக்க ஆயத்தமாக இருந்தால்தான் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. அந்த நம்பிக்கை வருகிறபோது அவர்கள் கடன் தருகிறார்கள். ஆனால் இதிலே யார் நிபந்தனைகளை விதிக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதைப்பற்றி ஆராய்ந்து யார் விதிமுறை களை வகுக்கிறார்கள் என்பதைப் பார்த்து ஆராயலாம்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள பினாமி நிலங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள் 690 மற்றும் 691 ஒன்றாக எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

*வினா எண். 690—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1980-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம், தஞ்சை ஜில்லா நெ. 116, கொலமாணிக்கம் கிராமம் மக்கள் மூலமாகவும் சர்வோதய தலைவர் மூலமாகவும் நேரிலும் தபால் மூலமும் மனுக்கள் (பினாமி நிலங்கள் பற்றி) அரசாங்கத்திற்கு வந்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) 1980 ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் அரசுக்கு மனு வந்தது.

(ஆ) இது பற்றி அரசு பரிசீலித்து, தகுந்த நடவடிக்கை எடுத்து சவளக்காரன் கிராமத்தில் பினாமி யென்று கருதப்பட்ட நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்து அவர்கள் சாகுபடி செய்து வருகிறார்கள். குலமாணிக்கம் கிராமத்தில் உள்ள எல்லா நிலங்களையும் தமிழ்நாடு சர்வோதய விவசாயத் தொழிலாளர் சங்கத்திற்கும். வேறு ஒரு தனிப்பட்ட நபருக்கும் தமிழ்நாடு வக்ப் வாரியத்தின் அனுமதி பெற்று விற்பதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.